

மறைந்த கோவை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.ரா.மோகன் கழக செய்தி தொடர்பு மாநில துணைச்செயலாளர் கோவை செல்வராஜ் ,கழக மாணவரணி மாநிலத் தலைவர் ராஜீவ்காந்தியின் மாமனார் இருதயராஜ் முன்னாள் நகரக்கழக செயலாளர் மனைவி ஆகியோர் இல்லங்களுக்கு கழக துணைப்பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. நேரில் சென்று அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி அவர்களு குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் கோவை மாநகர் மாவட்டக் கழக செயலாளர் நா.கார்த்திக், தொ.அ.ரவி பகுதிக்கழக செயலாளர்கள் ப.பசுபதி,கார்த்திக்செல்வராஜ், சேதுராமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர். சண்முகசுந்தரம், சோமு என்கிற சந்தோஷ், பொதுக்குழு உறுப்பினர் முமச.முருகன், வட்டக்கழக செயலாளர் அமானுல்லா, போஸ் பகுதி துணைச்செயலாளர் பாரதிநகர் செல்வம், ஒன்றிய செயலாளர் சுரேந்திரன், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் லாராபிரேம்தேவ், விக்னேஷ்வரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் கண்ட கனவு!

# காவேரி - குண்டாறு இணைப்பு நிச்சயம் நிறைவேற்றப்படும்!

## சட்டப்பேரவையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உறுதி!

**சென்னை, ஜன.12-**

**சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி காவேரி - குண்டாறு இணைப்பு குறித்து பேசினார். அப்போது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறுக்கிட்டு காவேரி - குண்டாறு இணைப்பு எங்கள் தலைவர் கண்ட கனவு, நிச்சயம் இந்த அரசு நிறைவேற்றும் என்று உறுதிபட தெரிவித்தார்.**



இதுகுறித்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கூறியதாவது :-

காவேரி-குண்டாறு இணைப்பு என்பது, எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த அவையில் 3 திட்டங்களை ஒருசேர அறிவித்தார்கள். ஒன்று, தாமிரபரணி-கருமேனியாறு இணைப்புத் திட்டம், இரண்டாவது, தெண்பெண்ணையாறு-செய்யாறு இணைப்புத் திட்டம், மூன்றாவது, காவேரி-குண்டாறு இணைப்புத் திட்டம். இந்த மூன்று திட்டங்களை 2009 ஆம் ஆண்டு தாமிரபரணி-கருமேனியாறு இணைப்பிற்கு நான் அடிக்கல் நாட்டினேன். பல ஆண்டுக் காலம் அது கிடப்பிலே போடப்பட்டு, இருக்கிற இடம் தெரியாமல்போனதற்குஅப்புறம்இப்பொழுதுதான் அதை எடுத்து, நெருங்கக்கூடிய நிலைமைக்கு இப்போதுதான் அது வந்திருக்கிறது. அதேபோன்றுதான் காவேரி-குண்டாறு இணைப்பை நிச்சயம் நடத்த வேண்டுமென்பதற்காக, மாயனூரில் அதற்காக காவேரியில் ஒரு தடுப்பணையை 186 கோடி ரூபாயில் கட்டினோம். அதற்குப் பிறகு எங்கள் ஆட்சி போய்விட்டது. நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? இரண்டே இரண்டு tender விட்டிருக்கிறீர்கள். அதையும் ஒன்றாக விடவில்லை. இந்த மாவட்டத்தில் ஒரு tender, அந்த மாவட்டத்தில் ஒரு tender. இவாளுக்கு ஒரு recommendation, அவாளுக்கு ஒரு recommendation. அவர்களை கூப்பிட்டார்களேதவிர, நின்றுபோய்விடுகிறது. ஆகையினால், காவேரி-குண்டாறு இணைப்பு என்பது, எங்கள் தலைவர் கலைஞர் கண்ட கனவு. நிச்சயம் இந்த அரசு நிறைவேற்றும். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்.

### உயர் கல்வியின் எதிர்காலத்தைப் பாதிக்கும் வகையில் ஒன்றிய அரசு வெளியிட்ட வரைவு நெறிமுறைகளை எதிர்த்த

# இந்தியாவின் ஒற்றை முதல்வர் நமது தளபதி - கலைஞர் உருவில் மாநில உரிமைகளை கட்டிக் காக்கிறார்!

## சட்டப்பேரவையில் முதல்வரின் தனித்தீர்மானம் மீதான விவாதத்தில் – உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் முழக்கம்!

**சென்னை, ஜன.12-**

**சட்டப்பேரவையில் நேற்று, முன்தினம் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த தனித் தீர்மானம் மீதான விவாதத்தில் உரையாற்றிய உயர் கல்வித்துறை அமைச்சர் - முனைவர் கோவி. செழியன், "உயர் கல்வியின் எதிர் காலத்தைப் பாழாக்கும் வகையில் ஒன்றிய அரசு வெளியிட்ட வரைவு நெறி முறைகளை எதிர்த்த இந்தியாவின் ஒற்றை முதல்வர் நமது தளபதி அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உருவில் மாநில உரிமைகளைக் கட்டிக் காக்கிறார்" என்று குறிப்பிட்டார்.**



சட்டப்பேரவையில் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பேசியதாவது:-

உயர் கல்வியையும், மருத்துவத்தையும் தனது இரு கண்களாகக் கொண்டு அதற்கான பல்வேறு சிறப்பான திட்டங்களை யாரும் சிந்திக்காத வண்ணம் நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். குறிப்பாக உயர் கல்வித் துறைக்கு முத்தான திட்டங்களான, 'புதுமைப் பெண்' திட்டம், 'தமிழ்ப் புதல்வன்' திட்டம், 'நான் முதல்வன்' திட்டம் போன்ற திட்டங்களை வழங்கி உயர் கல்வியை சிறப்படையச் செய்து வருகிறார். அதனால்தான் உயர் கல்வியில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் உயர் கல்வியின் கட்டமைப்பையும், மாணவர்களின் எதிர்காலத்தையும் பாதிக்கும் வகையில் ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகளை எதிர்த்து, அதனைத் திரும்பப் பெற வேண்டுமென வலியுறுத்தி, இந்த அவையில் அரசினர் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்த நமது முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டில் பல மாநிலங்கள், பல பிரதேசங்கள், யூனியன் பிரதேசங்கள் இருந்தாலும், மாநில சுயாட்சி, மாநில உரிமைகளைக் கட்டிக் காப்பதில் தலைமகன்களாக இருக்கக்கூடிய தலைவர்கள் பேரறிஞர் அண்ணாவும், அன்புத் தலைவர் டாக்டர் கலைஞரும் ஆவர். அந்த இருக்கையை இன்று தக்க வைத்து, மாநில உரிமையைக் கட்டிக் காக்க தீர்மானம் கொண்டு வந்திருக்கிற இந்தியாவின் ஓர் ஒற்றை முதலமைச்சர் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்பது எல்லோரும் பாராட்டக்கூடிய செயல். அந்த வகையில், மாணவர்கள் சார்பாக முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்திற்கு நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக்கழகங்களுக்கான துணை வேந்தர்கள் நியமனத்தில் தேர்வு செய்கிற தேர்வுக் குழுவில் இதுவரை 3 பேர் இருந்தனர். அதனைச் சீர் கெடுக்க, சர்வாதிகார போக்கோடு மாநிலங்களின் கருத்துகளைக் கேட்காமல், கலந்து பேசாமல் யு.ஜி.சி. சார்பில் 4வது உறுப்பினர் சேர்க்கப்பட வேண்டுமென்பது மாநில உரிமையைப் பறிப்பதாகும். அதனைத் திரும்பப் பெற கொண்டுவந்த இந்த அரசினர் தனித் தீர்மானத்தை பேராசிரியர்களும், கல்வியாளர்களும் வரவேற்கிறார்கள் என்பது இன்னும் மட்டற்ற மகிழ்ச்சி.

தமிழ்நாட்டை ஆண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஏழை, எளிய மாணவர்களின் நலன் கருதி, உயர் கல்வியில் பொறியியல் படிப்பில் நுழைவுத் தேர்வை (Entrance Exam) ரத்து செய்தார்கள். அதனால் மாணவர்களின் நலன்காத்த மகத்தான தலைவர் கலைஞர். மீண்டும், உயர் கல்வியில் நுழைவுத் தேர்வு ஒன்றை ஒன்றிய அரசு திணிப்பது மாணவர்களின் நலனுக்கு எதிரானது என எண்ணி, அதனைத் தடுத்து நிறுத்த தீர்மானம் கொண்டுவந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர், முத்தமிழறிஞர் கலைஞர் இறக்கவில்லை, இறக்கவில்லை; இதோ இருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியின் உருவில் அவர்! மாநில உரிமையைக் கட்டிக்காப்பார் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற துணை நின்ற அனைத்து கட்சித் தலைவர்களுக்கும், சட்டமன்றக் குழுத் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைவர் அவர்கள் இதற்காக வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். இது எதை உணர்த்துகிறது என்றால், BJP வெளிநடப்பு செய்வதன்மூலம் யு.ஜி.சி. ஒன்றிய பா.ஜ.க.வின் கைப்பாவை என்பதை நிரூபிக்கக்கூடிய வகையில் இருக்கிறது.

மூத்த உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் நீதிமன்றத்தினுடைய வழக்கை விரைந்து நடத்த வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசின் சார்பில் வழக்கறிஞர்கள் குழு அமைத்து, விரைந்து வழக்கை நடத்தி, மாநில உரிமைகள் கட்டிக்காக்கப்படும் என்பதையும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் அவர்கள் கொண்டுவந்த திட்டம் சமச்சீர் கல்வித் திட்டம். அந்தத் திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எல்லா உறுப்பினர்களும் சொன்னதைப் போல், மக்கள் போராட்டம், சட்டப் போராட்டம் நடத்தி முதலமைச்சர் அவர்கள் காக்க வேண்டும்; நாங்கள் துணை நிற்போம் என்று முன்வரிசையில் இருக்கிற தலைவர்கள் சொன்னார்கள்.

தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களே, கலைஞர் அவர்கள் கொண்டு வந்த சமச்சீர் கல்வித் திட்டம் தடை செய்யப்பட்டது. பின்னர், உச்சநீதிமன்றத்திற்குச் சென்று, தி.மு. கழகம் ஆட்சியில் இல்லாத போது, கோட்டையில் இல்லாதபோது, அதிகாரத்தில் இல்லாதபோது, ஆட்சி இல்லையென்றாலும் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு என்பது கலைஞர் அவர்கள் கொண்டுவந்த சமச்சீர் கல்விக்குத் துணை நின்றது என்பதை இந்தச் சபையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அந்த வகையில், முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை வரவேற்கிறேன். பா.ஜ.க. தீர்மானத்தை எதிர்த்து அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் பேசினார்.

### தமிழ்நாட்டில் "பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்" மூலம் - இதுவரை

# நமது முதல்வர் - 7,556 வகுப்பறைகளை திறந்து வைத்துள்ளார்!

## சட்டப்பேரவையில் - பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பெருமிதம்!

**சென்னை, ஜன. 12 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், கேள்வி நேரத்தின் போது பதிலளித்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, "பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் மூலம் மட்டும், நமது முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டில் இதுவரை 7,556 வகுப்பறைகளைத் திறந்து வைத்துள்ளார்" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**



சட்டப்பேரவையில் இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**டாக்டர் சி.சரஸ்வதி:** மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், நகப்பாளையம் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை மற்றும் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:**

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், நகப்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, கருத்துருக்கள் பெறப்பட்டு, கூடுதலாக 4 வகுப்பறைகளும், 200 மீட்டருக்கான சுற்றுச் சுவரும் 2025-2026 ஆம் கல்வியாண்டில், முன்னுரிமை அடிப்படையில், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக கட்டித் தரப்படும்.

**டாக்டர் சி. சரஸ்வதி:** மேலும், நகப்பாளையம் ஊராட்சி துவக்கப் பள்ளியில் போதுமான அளவில் கழிப்பறை வசதிகள் இல்லாத காரணத்தினால், மாணவச் செல்வங்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, இப்பள்ளிக்கு 2 கழிப்பறை வசதிகள் செய்து தரப்பட வேண்டும். மேலும், நகப்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிக்கு மொத்தம் 240 மீட்டர் நீளத்திற்கு சுற்றுச் சுவர் தேவைப்படுகிறது. அங்கு சுற்றுச் சுவர் இல்லாத காரணத்தினால், மது பிரியர்கள் இரவு நேரங்களில் பள்ளியின் உள்ளே வந்து மது அருந்திவிட்டு, கண்ணாடி பாட்டில்களை அங்கேயே உடைத்துவிட்டுச் செல்வதால், பாதுகாப்பற்ற நிலை உருவாகிறது. எனவே, அரசு விரைந்து சுற்றுச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** மேற்படி பள்ளிக்கூடத்தைப் பொறுத்தவரைக்கும் 6 வகுப்பறைகளும், 12 கழிப்பறைகளும், 1 உயர்நுட்ப ஆய்வகமும், 1 அறிவியல் ஆய்வகமும் ஏற்கெனவே இருக்கின்றது. ஏற்கெனவே சொன்னது போல், கூடுதலாக இன்னும் 4 வகுப்பறைகளும், 200 மீட்ட ருக்கான சுற்றுச் சுவரும் வருகிற கல்வியாண்டிலே கண்டிப்பாக கட்டித் தரப்படும்.

**டாக்டர் சி. சரஸ்வதி:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மொடக்குறிச்சி ஒன்றியத்திற்குட்பட்ட லக்காபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 1,100 மாணவ, மாணவிகள் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் கல்வி பயின்று வருகின்றனர்.

மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பள்ளியில் 32 வகுப்பறைகள் தேவைப்படுகிறது. ஆனால், தற்போது 20 வகுப்புகள் மட்டுமே உள்ளன. வகுப்பறைகள் பற்றாக்குறையால் மாணவர்களுக்கு மரத்தடியிலும், பள்ளி verandaவிலும், ஆய்வகத்திலும் வகுப்புகள் நடந்து கொண்டிருக்கிறது. எனவே, பள்ளிக்குக் கூடுதலாக 12 வகுப்பறைகளும், நூலகத்திற்கு ஒரு அறையும், அறிவியல் ஆய்வகத்திற்காக ஒரு அறையும் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** முதலமைச்சர் அவர்களோடு ஈரோடு மாவட்டத்திற்கு நாங்கள் அரசு நிகழ்ச்சிக்கு செல்லும் பொழுதே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் இதுசார்ந்து கோரிக்கைகள் வழங்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களும் அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் துறைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். கண்டிப்பாக நீங்கள் கேட்கின்ற அதிகப்படியான வகுப்பறைகள் கட்டுகின்ற அந்தப் பணிக்கு கருத்துரு பெறப்பட்டு, அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுமட்டுமல்லாமல், இதுவரைக்கும் நீங்கள் பார்த்தீர்களென்றால், நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் 'பேராசிரியன் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 7,500 கோடி ரூபாயில் இதுவரைக்கும் 3,497 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே திறந்த கட்டடங்கள் மட்டும் என்று பார்த்தால், 7,556 வகுப்பறைகளை இதுவரைக்கும் நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது நடைபெற்றிருக்கக்கூடிய பணிகளைப் பார்த்தீர்களென்றால், 6,353 வகுப்பறைகள் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆய்வகங்கள், கழிவறைகள் என்று வரும்பொழுது 351 ஆய்வகங்களும், 350 கழிவறைகள் unit கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதேபோல், சுற்றுச்சுவர் என்று வரும்போது, 940 மீட்டருக்கு இந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது ongoing process.

இதில் நீங்கள் கேட்கக்கூடியது நம்முடைய கம்பம் சட்டமன்ற உறுப்பினர் நா. இராமகிருஷ்ணன் அவர்களும், க.கார்த்திகேயன் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். இதெல்லாம் படிப்படியாக ஒவ்வொன்றாக உங்களுக்கே தெரியும். இந்த 3 ½ வருடத்தில் திராவிட மாடல் அரசில்தான் எங்கு பார்த்தாலும் பள்ளிக் கட்டடங்கள் கட்டிக் கொண்டேயிருப்பதை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்கள் நீங்கள் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வரும் காலத்தில் அதுவும் விரைவாக யார், யாரெல்லாம் கேட்கிறீர் களோ அதற்கான கட்டடங்கள் எல்லாம் கட்டப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பரமத்தி சண்முகம்
### சனவரி 12 (2019)



**இளமைப் பருவத்திலேயே பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, பகுத்தறிவாளராகவும் – சிந்தனையாளராகவும் திகழ்ந்து, கழகம் தொடங்கிய பின்னர் கழகப் பணியாற்றியவர்.**

**கரூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மாநில நெசவாளர் அணித் தலைவராகவும் – தொ.மு.ச. பேரவை துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.,**

**கரூர் நகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். "சன்முரசு" இதழ் ஆசிரியராகவும் இருந்தவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்றதுடன், நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ.எம். ராமசாமி
### சனவரி 12 (2012)



**கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**சேலம் மாவட்டம் – ஆத்தூர் நகரச் செயலாளராக நான்கு முறையும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.**

**1989, 1996 ஆகிய இரண்டு முறை ஆத்தூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**